[illegible]

மலர் 4. இதழ் 12. ஜூன் 1937

JL
T15m 211,N33
N37.4.12
190348

# கலம்பகம்.

## மஹாத்மாவின் யோசனைகள்

மகாத்மாஜீ 'ஹரிஜன்' பத்திரிகையில் கல்வியைப்பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:— நான் கல்வி என்று சொல்லும்போது குழந்தைகள், மனிதர்கள் இவர்களது மனம், உணர்ச்சி, இவற்றில் சிறந்ததாக உள்ளதை விகாசிக்கச் செய்வதையே குறிப்பிடுகிறேன். எழுதப் படிக்கத் தெரிவதுடன் கல்வியின் இலக்ஷியம் நிற்கவில்லை. அது கல்வியின் ஆரம்பங்கூட ஆகாது. அது ஆண் பெண் பாலர்களுக்குக் கல்வி போதிப்பதற்கான சாதனமாகவே இருக்கும். எழுதப்படிக்கத் தெரிந்தால் கல்விகற்றதாகாது. நமது தேசம் கல்வியில் மிக்க பிற்போக்காக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நமது தேசத்தாருக்கு இது சம்பந்தமாகச் செய்யவேண்டிய கடமைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென்று நம்பமுடியாது. இந்த வேலைத் திட்ட நிறைவேற்றம் பணத்தைப்பொறுத்ததாக இருந்தால் இந்தத்தலைமுறையில் இதனை நிறைவேற்ற முடியாது. எனக்கு நிர்மாண யோசனைகளைக் கூறும் திறமை இல்லையென்று பிறர்சொல்லல்கூட அதனைப் பொருட்படுத்தாமல் தன் செலவுக்குத்தன்னைக் கட்டிக் கொள்ளக் கூடியதாகக் கல்வி இருக்கவேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன்.

ஆதலால் குழந்தைகளுக்கு உபயோகமுள்ள கைத்தொழில்களை ஆரம்ப முதலே போதிக்க ஆரம்பிக்கவேண்டும். பயிற்சிபெற ஆரம்பிக்கும் சமயத்திலிருந்தே குழந்தைகள் பொருள்களை உற்பத்திச் செய்ய முயலுமாறு செய்ய வேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடமும் தனது செலவுக்குப் பிறரை நம்பியிராமல் தன்னைத் தானே நம்பியிருக்கவேண்டுமானால் அது உற்பத்திச் செய்யும் பொருள்களையெல்லாம் சர்க்காரே வாங்கிக்கொள்ளவேண்டும். அம்மாதிரியான கல்விமுறையில் மனதையும் ஆத்மாவையும் பூரணமாக வளர்ச்சி செய்ய முடியுமென நம்புகின்றேன்.

ஒவ்வொரு கைத்தொழிலையும் தற்போதுபோல சம்பிரதாயமான முறையில் போதிக்காமல் சாஸ்திரிய முறையில் போதிக்கவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு முறையின் காரணங்களை அறிந்து கொள்ளவேண்டும். நான் நம்பிக்கையுடன் இவ்வாறு எழுதுகிறேன். ஏனெனில் தொழிலாளருக்கு நூல் நூற்கக் கற்றுக் கொடுக்குமிடங்களில் எல்லாம் இவ்வாறு செய்து அனுபவம் பெற்றிருக்கிறோம். நானே செருப்புத்தைக்கவும் நூற்கவும் இம்மாதிரியான முறையில் போதித்திருக்கிறேன் இம்முறை நல்ல பலன் அளித்திருக்கிறது. இப்பூகோள சரித்திரஞானமில்லாமல் வாய்மொழியாகப் பொதுத் தகவல்களைத் தெரிவித்து போதனை செய்வதே சிறந்த முறை என நான் கண்டு கொண்டிருக்கிறேன்.

மஹாத்மா காந்தி.

## மந்திரியும் மந்திரவாதியும்

மந்திரியென்றால் எதைவேண்டு[illegible]லும் செய்துவிட முடியுமென்று நினைத்துக்கொள்ளாதீர்கள். கடைசியில் எல்லாவற்றிற்கும் பணம் கொடுப்பவர் வரி செலுத்துபவர்தான். மந்திரி நீர்க்கட்டி போன்றவர். ஒரு மார்க்கத்தில் செல்லும் பணத்தை வேறோர் மார்க்கத்தில் திருப்பிவிடலாம். ஒருவருக்கு கிராண்டு கொடுக்கவேண்டுமென்றால் மற்றொருவருக்கு கொடுக்கப்பட்டு வரும் கிராண்டை நிறுத்த வேண்டும்.

மந்திரி மந்திரவாதி போன்றவர். ஒரு மனிதன் பையிலிருக்கும் பணத்தை மறையச் சொல்லுவது போலும் அதை மற்றொருவர் பையிலிருந்து எடுப்பதுபோலும் பாசாங்கு செய்யலாம். ஆனால், உண்மையில் மந்திரவாதி நாணயத்தை உற்பத்தி செய்ய முடியுமா?

ஸி. இராஜகோபாலாச்சாரி.

## கலால் வருமானம்

படித்தவர்கள் நிறைந்த [illegible] கள்ளுக்கடையிருக்கிற[illegible] வேறிடத்

துக்கு அகற்ற வேண்டுமென்று சிலர் என்னிடம் வந்து கேட்டார்கள். நான் முடியாதென்று மறுத்துவிட்டேன். உங்கள் படிப்புக்குப் பணம் கஜானாவில் விளைகிறதென்று நினைக்கிறீர்கள். இந்த கள்ளுக்கடையிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தான் கல்விக்கு பணம் கொடுக்கப்படுகிறது. ஆகையால் அது உங்களுக்குப் பக்கத்திலிருப்பது தான் தகுதி.

ஏழை கூலிவாங்கிக் குடித்துவருகிறான். அப்பணத்தைச் சர்க்கார் வாங்கி உங்கள் கல்விக்குக் கொடுக்கிறார்கள். சர்க்கார் உங்களிருவருக்கும் நடுவிலில்லாது அவன் பணத்தை நீங்களே பிடுங்கிக் கொள்ளுங்களென்றால் சம்மதிப்பீர்களா? "ஐயோ பாவம், ஏழை பணத்தைத் திருடலாமா" வென்பீர்கள். இவ்வார்த்தையை நீங்கள் ஓட்டர்களாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நான் கூறிய விஷயங்களைக் குறித்து நீங்கள் பயப்பட வேண்டும். வேறுவழிகளில் கல்விக்குப்பணம் பெற முயற்சி செய்யப்பட்டு வருகிறது. நான் கூறிய விஷயங்களை நீங்கள் நன்கு ஆலோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸி. இராஜகோபாலாசாரியார் [பிரதம மந்திரி.

# நமது பத்திரிகை.

இந்த ஜூன் மாதப் பத்திரிகையுடன் நமது பத்திரிகைக்கு 4-ம் வருஷம் பூர்த்தியாகிறது. இந்த 4 வருடங்களாக சேர்ந்த சந்தாதாரர்கள் யாவருக்கும் நமது எல்லா பத்திரிகைகளும் இது வரையில் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆனால் சில சந்தா நேயர்கள் இன்னும் 2 வருடம் 3-வருடம் வரையில் சந்தாவை செலுத்தாமலே பத்திரிகைகளை வாங்கி வாசித்து வந்திருக்கின்றனர். ஆனால் இந்த 5-வது வருடம் முதற்கொண்டு 4-வது வருட சந்தாவை செலுத்தினவர்களுக்கு மாத்திரம் பத்திரிகையை ஒழுங்காக மாதா மாதம் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ஆகலின் சந்தா அனுப்பாத பழைய சந்தாதாரர்களுக்கு இனி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. ஆதலின் இப்பத்திரிகையைக் கண்டதும் 5-வது வருடம் நமது பத்திரிகையை வேண்டுபவர்கள் உடனே 5-வது வருட சந்தாவென்றும், பழைய சந்தாதாரரென்றும் விலாசம் தெளிவாக மணி ஆர்டர் கூப்பனில் எழுதி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்.

# ஆரம்பாசிரியர்களுக்கு ஓர் அறிவிப்பு

சிறுவருக்கேற்ற சிறு கதைகள், உலகவினோதங்கள், இயற்கை, பூகோள பாடங்கள், பாடல்கள், விடுகதைகள் முதலிய எளிய நடையில் எழுதியனுப்பும் ஆசிரியர்களுக்கு முதல் பரிசு ரூ. 2. இரண்டாவது பரிசு ரூ. 1. ஆக பிரதி மாதம் பரிசளிக்கப்படும். பிரதி மாதம் கட்டுரைகள் 15-ம் தேதிக்குள் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும், பரிசுபெற்ற கதைகளை "ஆரம்ப போதினி" பத்திரிகையில் எழுதினவர்கள் பெயருடன் பிரசுரிக்கப்படும், பரிசு பெறாத கட்டுரைகள் தபால் பில்லைகள் அனுப்பினாலல்லாது திருப்பி அனுப்பிக்கப்படமாட்டாது.

தாசர்புறம் திண்ணனூர் M.S.M. } மானேஜர், ஆரம்ப போதினி

# சென்னை மாகாண

# ஆசிரிய மானேஜர்கள் ஐந்தாவது மகாநாடு.

செப்டம்பர்மீ 4, 5-ம் தேதிகளில் சென்னையில் கூடும்.

தஞ்சை ஜில்லா கல்விச் சபையின் உபத் தலைவர். திரு, டி. ஏ. சுவாமிநாதருவ் அவர்களின் தலைமையின் கீழ், 8-8-37-ல் சென்னையில் ஷை சங்கத்தின் நிர்வாகக் கூட்டமொன்று சென்னையில் கூடியது. அவ்வமயம் நமது சங்கத்தின் 5-வது மகாநாடு செப்டம்பர்; 4, 5-வது தேதிகளில் சென்னையில் கூட்டப்படவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

தற்போது நமது இராஜதானியிலுள்ள எல்லா எய்டட் பாடசாலைகளுக்கு, முக்கியமாக ஆசிரிய மானேஜர்களுக்கு, ஒரு நெருக்கடியான காலமாகும். முன்பிருந்த கல்வி மந்திரியால் செய்யப்பட்ட பல பிற்போக்கான சட்ட திட்டங்களால் எய்டட் பாடசாலைகளுக்கு பலவித துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் ஆசிரிய மானேஜர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்கள் பல. கல்வி யிலாகா அதிகாரிகள், எய்டட் பாடசாலைகள் நமது நாட்டுக் கல்வி அபிவிருத்திக்கு செய்து வந்த பெரிய தொண்டை அறவே மறந்து எய்டட் பாடசாலைகளை புறக்கணித்திருக்கிறார்கள்.

அதிகாரிகள் மனோபாவம் எப்படியாயினும் நாம் நம்முடைய சகோதரர்களை ஒன்று திரட்டி நம்முடைய குறைகளை பகிரங்கமாகவும், தைரியமாகவும், தற்போது அரசாங்கப் பொறுப்பை ஏற்றுள்ள காங்கிரஸ் மந்திரிகளிடம் எடுத்துச் சொல்லவேண்டியது நமது முக்கிய கடமையாகும் தியாக மூர்த்திகளாகிய காங்கிரஸ் மந்திரிகள் அதிகார வர்க்கத்தினர் வலையில் சிக்காமல், நாம் எடுத்துக் காட்டும், குறைபாடுகளையும், சீர்திருத்தங்களையும், நன்றாக ஆலோசித்து, நமது இராஜதானி முழுதும் பரவிக் கிடக்கும் எய்டட் பாடசாலைகளின் ஒத்துழைப்பைக் கொண்டு அப்பாடசாலைகளுக்கு பண உதவியையும், செல்வாக்கையும் தந்து, ஆதரித்து; ஆரம்பக் கல்வி நமது இராஜதானியில் காட்டுத்தீயைப்போல் பரவுதற்கு வேண்டிய சட்ட திட்டங்களை சீக்கிரம் பிறப்பிப்பார்களென்று நம்புகின்றோம்.

ஆதலின் மாகாணத்திலுள்ள ஆசிரிய மானேஜர்கள் தங்கள் ஜில்லா சங்கங்களையும், ரேஞ்சு சங்கங்களையும், சீக்கிரம் கூட்டி, சென்னை மகா நாட்டிற்கு விஜயம் செய்யும் டெலிகேட்டுகளின் பெயர்களையும், தீர்மானங்களையும், சீக்கிரம் கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இன்னும் இம்மகாநாட்டை, சீரும் சிறப்புடன் நடத்திவைப்பதற்கு தங்களாலான பண உதவியை உடனே அனுப்பிவைக்குமாரு கேட்டுக்கொள்ளுகிறோம்.

51, வென்கடாசல நாய்க்கன் தெரு, இராயபுரம், மதறாஸ். } கே. இராமானுஜம் பிள்ளை, பி. வீரராகவன், காரியதரிசிகள்.

# ஆரோக்கியத் துண்டுத் துணுக்குகள்

ஒன்றும் உண்ணாமல் பட்டினி கிடக்கிறவர்களைப்போலவே, அளவு கடந்து உண்பவர்களும் நோய்வாய்ப் பட்டவராவார்.—ஷேக்ஸ்பியர் [மர்சென்டு ஆப் வெனிஸ்.)

புத்தகங்களைப்படிப்பது யுவர்களுக்கு ஒரு தொழிலைக் கொடுக்கிறது; கிழவர்களுக்கு இன்பத்தை அளிக்கிறது; சுகமாயுள்ளவர்களுக்கு அதிகசுகத்தைதக்கொடுக்கிறது; துக்கம் வந்தபோது அதை நிவர்த்தி செய்கிறது, வீட்டில் இருக்கும் போது நமக்குப் போதுபோக்காக இருக்கிறது; வெளியே போகும்போது நமது வேலைக்குத் தடங்கல் செய்கிறதில்லை; இரவில் நம்மை ஓண்டியாயிருக்கும்படிச் செய்கிறதில்லை; பிரயாணம் செய்யும்போது நமக்குத் துணையாகவிருக்கிறது.—ஸிஸரோ.

வியாதியில் மனோவேஷ்டை —கானன் என்பவர் சொல்லுகிறபடி, மனோவேஷ்டையானது ஜீரணக்காலைப் பாதித்து, சுற்றிச்சுற்றிக் கெடுதலையையே உண்டுபண்ணுகிறது. தங்கியுள்ள ஆகாரமானது போதுமான ஜீரண ரஸங்களால் பாதுகாக்கப்படாமல் புளிப்படைந்து, கிருமிகள் உண்டாகி, வாய்வு சம்பந்தப்பட்டு, அழற்சியுள்ள விஷவஸ்துக்களை உண்டாக்குகிறது. இவைகள் தங்கள் முறையில் அழற்சியை உண்டுபண்ணி, தேகத்தில் உறிஞ்சப்பட்டு, அதற்குத் தீங்கை விளைவிப்பதுடன், மனதையும் பாதிக்கிறது. ஆனதுபற்றி, கூடிய மட்டும் ஆரம்பத்தில் துக்கம், கோபம் முதலிய மனோவேஷ்டைகள் அதிகமாக உண்டாகாதபடி அவைகளைத் தடுப்பதன் அவசியத்தை சாதாரணமாய் தெரிந்துகொள்வாரில்லை. இம்மனோவேஷ்டையினால் உண்டாகும் மாறுதல்கள் நுட்பமாயிருப்பதால், அவற்றைக் கண்டுகொள்ளமுடியவில்லை. சாதாரணமாக, ஜீரணத்திற்குச் சுகமும், மனோநிம்மதியும் எவ்வாறு அடிப்படையாக இருக்கின்றனவோ, அவ்வாறே ஜீரணக்கோளாறுக்கு மனோவேதனையும், மனதில் ஆயாஸமும் அடிப்படையாக இருக்கின்றன.—மெடிகல் ஓரல்டு.

முதிர்ந்த வயதுள்ள ஒருவனுக்கு முக்கியமான ஆரோக்கிய விதிகள்.—உனது ஆரோக்கியமானது, உனது வாழ்வு என்னும் பாங்கியில் 'இப்போதுள்ள மிச்சப்பணம்'. உனது வாழ்வில் நீ தினம் வேலை செய்து உழைப்பதால், இந்த மிச்சப்பணம் குறைந்துகொண்டேவரும். அது அதிகம் குறைந்து போகாதிருக்கும் பொருட்டு, இந்தப் பாங்கில் தினம் மேன்மேல் பணம் கட்டிக்கொண்டிருக்கவேண்டும். அந்தப் பணமாவது ஒழுங்கான தூக்கம், அமைதி, நல்ல காற்று, விளையாட்டு, வெளிப்புறம் உட்புறம் சுத்தம், நூதன பழங்கள், பச்சை மரக்கறிகள், பால் முதலியன சம்பந்தப்பட்ட நல்ல ஆகிய இவைகளேயாம். அடிக்கடி பரீக்ஷித்துப் பார்த்து மிச்சப் பணம் எவ்வளவென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

நீ போகும்போது செலுத்திக்கொண்டே போகவேண்டுமென்று ஆரோக்கிய விதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிவேகமாகப் போனால், தாறுமாறாய்ச் செலவழிந்துபோகும் உன்னுடைய வாழ்நாளில் ஏற்படும் செலவை உன்னுடைய ஆரோக்கிய வரவு செலவு திட்டத்திற்குள்ளாகவே வைத்திரு. ஆரோக்கியச் சிக்கனம் இருக்கும்படி பழகு.

ஒரு வாலிபன் ஆரோக்கியமென்னும் பாதையில் வேகமாய் ஓடுகிறான். முதிர்ந்த வயதுள்ளவன் ஆரோக்கியக் கஷ்டங்கள் அதிகமாயுள்ள நெருக்கடியான பாதையில் ஓட்டிக்கொண்டு போகிறான். ஆனது பற்றி, முதிர்ந்தவனுடைய ஆரோக்கியத்திற்காக ஏற்பட்ட போக்கு வரவுச் சட்டங்களுக்குக் கீழ்படிந்து நட, எல்லா விஷயங்களிலும் மிதம் இருக்கும்படி மெதுவாய்ப் போ. தேகம், மனது இவற்றின் அதிக உழைப்பு என்னும் செகப்பு விளக்குகளுக்கு எதிரில் சென்று முட்டிக்கொள்ளாதே.—புலடின் ஆப் தி அகாடெமி ஆப் மெடிஸன் ஆப். க்ளீவ்லாண்டு, ஓஹியோ—மெடிகல் ஓரல்டு.

# ஜில்லாக் கல்விச் சபைகள்

## ஒழிப்பதா? திருத்துவதா?

மேற்கண்ட தலைப்பில் உங்கள் [11-8-37] பத்திரிகையில் ஒரு குறிப்பைக் கண்டோம். அது அக்குறிப்பு மந்திரியாரால் பத்திரிகைக்கு கொடுக்கப்பட்டதா. அல்லது பத்திரிகைக்காரர்கள் ஊகித்து எழுதினார்களா? என்பது விளங்கவில்லை. எப்படியாயினும் கல்விச் சபைகளை ஒழிப்பதற்கோ அல்லது திருத்துதவற்கோ காரணம் காட்டி இருப்பது ஜில்லாக் கல்விச் சபைகளைப்பரிபாலனம் செய்வதற்கு ரூ. 60000 ஆகிறது என்பது. பூசனிக்காய் போவது தெரியாமல், கடுகுபோன இடத்தில் காதை அறுத்துக்கொண்டு இருந்தாலும் என்ற பழமொழிப்படி, கல்வி இலாகாவிலுள்ள ஊழல்களையும், அனாவசியமான சிப்பந்தி செலவுகளையும் காங்கிரஸ் மந்திரிகள் சற்று கவனிப்பார்களேயானால் இந்த 60000 ரூபாய் ஒரு பெரிய ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஒரு அனாவசிய செலவாக தெரியாது. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சியின் கடைசி காலத்தில் ஏறக்குறைய 1000 ரூபாய் மாதச் சம்பளமுள்ள நான்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களையும், சுமார் 60, 70 ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர்களையும், காங்கிரஸ் மந்திரிகள் வருவதற்குள் முன்பே கல்வி இலாகா அதிகாரிகள் அனாவசியமான ஏற்பாடுகள் செய்துக் கொண்டார்களே, அதை காங்கிரஸ் மந்திரிகள் உடனே கவனித்து, அந்த அனாவசியமான சிப்பந்திகளை நீக்கிவிட்டு ஏறக்குறைய ஒரு லக்ஷ ரூபாயை மிச்சம் பிடிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இம்மாதிரியாக பலவிதமான செலவுகள் அனாவசியமாக கல்வி இலாகாவில் இருந்து வருகின்றன. இதை உடனே கல்வி மந்திரியை கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

### கல்விச் சபைகள்

ஆரம்பக் கல்வி அபிவிருத்தி வகையில், கல்விச் சபைகள் சரியாக வேலை செய்யவில்லையென்பதாக இடைக்கால மந்திரி காலத்தில் வெளியிட்ட அரசாங்க அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர அரசாங்கம், கல்விச் சபைகளை ஒழிக்கவோ, திருத்தவோ காரணங்கள் காட்டவில்லை, ஆனால், எடுத்த சில கல்விச் சபைகள் சரிவர நடக்கவில்லை என்பதில் சில உண்மைகள் உண்டு. அதற்கு காரணம் அரசாங்கமே. எப்படியெனில் 1920ஆம் வருஷம், ஆரம்பக் கல்விச் சட்டத்தின் கீழ் ஏற்பட்ட இக் கல்விச் சபைகள் கனம் மந்திரி டாக்டர் சுப்பராயன் காலம் வரையில் எல்லா வகையாலும் சர்வ சுதந்திரத்தை அனுபவித்து வந்தன. கல்விச் சபைகள் கேட்ட பணத்தையும், செல்வாக்கையும் கல்வி மந்திரிகள் கொடுத்து வந்தார்கள், கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்குப் பிறகு கல்விச் சபைகள் எல்லா வகையிலும் புறக்கணிக்கப்பட்டு, சர்வ அதிகாரத்தையும், கல்வி இலாகாவிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சுருங்கக் கூறமிடத்து நமது நாட்டைவிட்டு ஒழிக்கவேண்டிய இரட்டை ஆட்சியானது கல்விச் சபை ஒரு புறமும், டைரக்டர் ஒரு புறமுமாக கல்வியுலகில் பிடித்துக்கொண்டிருக்கிறது, இந்த நிலையில் கல்விச் சபைகள் எவ்வாறு வேலைசெய்ய முடியும் இதைக் கல்வி மந்திரி கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

### சீர்திருத்துவது எப்படி?

கல்விச் சபைகள், ஆரம்பக் கல்வி, அபிவிருத்தி அடையவேண்டுமானால். தமது மாகாணத்தில் மிக்க கல்விச் சபைகள் அவசியம். ஜன நாயக ஆட்சி வேண்டுமென்று மக்கள் போராடும் இக்காலத்தில், நமது தாய் நாட்டு கல்வி அபிவிருத்திக்கு அடிப்படையாயுள்ள ஆசிரியரும், ஆசிரிய மானேஜர்களுக்கும், மானேஜர்களுக்கு கல்வி அறிஞர்களுக்கும், அடிக்கடி கல்வி அதிகாரிகளின் மனப்போக்கையும், பொதுஜன அபிப்பிராயங்களையும் நாட்டின் கல்வி நிலையையும், யோசிப்பதற்கு ஒவ்

# குறிப்புக்கள்

ரிகார்ட் ஷீட் (Record sheet) பல ஜில்லாக்களில் எய்டட் பாடசாலைகளில் வைக்கும்படி டிப்டி இன்ஸ்பெக்டர்கள் வற்புறுத்துவதாக தெரிகிறது. இந்த ரிகார்ட் காகிதங்கள் கட்டாய கல்வி முறை அமுலிலிருக்கும் இடங்களிலுள்ள பாடசாலைகளில் தான் புதிய சட்டத்திருத்தத்தின்படி வைக்கப்படும்படி வற்புறுத்தப்படவேண்டும். கட்டாயக் கல்வி முறை அமுலிலில்லாத இடங்களிலுள்ள எய்டட் பாடசாலைகளில் இந்த ரிகார்ட் ஷீட்டை டிப்டி இன்ஸ்பெக்டர்கள் வற்புறுத்த ஆரம்பக் கல்விச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்திய ரூலில் இடமில்லை யென்று நினைக்கின்றோம்.

இந்த வருடம் ஹையர் கிரேட் உபாத்தியாயருக்கு ரூ. 1-ம் செகண்டரி கிரேட் உபாத்தியாருக்கு ரூ. 1-ம் சென்ற வருஷம் கவர்ன்மென்ட் அறிக்கையில் தெரிவித்தபடி தற்போதிய காங்கிரஸ் கல்வி மந்திரிகள் உயர்த்துவது சந்தேகத்திலிருக்கிறது. ஆதலின் அந்தந்த ஜில்லாவிலுள்ள காங்கிரஸ் எம். எல். ஏ. சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்டு செப்டம்பர் மாதத்தில் நடக்கும் சட்ட சபையில் கேள்விகள் கேட்கும்படிச் செய்யவேண்டும். அப்பொழுது தான் அதற்கு வழியேற்படும். காங்கிரஸ் மந்திரிகள் வந்ததினுல் ஆரம்ப ஆசிரியர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படுமென்று வாய், கை திறவாமல் பாடசாலைகளில் உட்கார்ந்துக்கொண்டிருந்தால் ஒரு பயனையும், நாம் அடைய முடியாது. ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டி. காங்கிரஸ் (எம். எல். ஏ.) சட்ட சபை அங்கத்தினர்களை வரவழைத்து நம் குறைகளை எடுத்துக்காட்டி, சட்ட சபையில் பல தீர்மானங்களை கொண்டு வரவேண்டியது ஆரம்பாசிரியர்கள் கடமை.

---

ஜில்லா போர்ட், முனிசிபாலிடி, இவைகளின் ஆதிக்கத்திலுள்ள பாடசாலைகளில் உபாத்தியாயினிகளை அமைக்கும்பொழுது முதலில், அனுதைப் பெண்களுக்கும், விதவைகளுக்கும், கலியாணமான வயது முதிர்ந்த ஸ்திரிகளுக்கும் முதலில் இடங்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

---

இனி புதிதாக ஏற்படுத்தப்படும் பாடசாலைகளில் திறமைவாய்ந்த (Trained Teachers) உபாத்தியாயர்கள் மூன்றில் இரண்டு பங்கு இருக்கவேண்டுமென்றும், அவ்விதமெல்லாம் அதிகப்படியாக வைக்கப்படும் திறமையற்ற (untrained Teachers) உபாத்தியாயர்களுக்கு கிராண்டுகள் கொடுக்கப்பட மாட்டாதென்றும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள கல்வியிலாகா ரூல்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

---

வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு கல்விச்சபை இருக்கவேண்டியது அவசியம். ஆனுல், தற்போதைப்போல் அல்லாது கல்விச் சபைகள் திருத்தி அமைக்கப்படல் வேண்டும். நூறு பாடசாலைகளுக்கு ஒரு சங்கங்களின் மூலமாக ஆரம்பாசிரியரும், ஒரு ஆசிரிய மானேஜரும் மானேஜரும் கல்விச் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தாலூகா வாரியாக ஒரு போர்டு அங்கத்தினர் சேர்க்கவேண்டும். சில கல்வி அறிஞர்களை சேர்க்கப்படவேண்டும். தற்போது அங்கத்தினர்களை நியமிக்க பழக்கம் ஒழிய வேண்டும். கல்விச்சபை அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படும், பிரயாணச் செலவு சற்று குறைக்கப்படவேண்டும், கல்விச் சபைகள் அரசாங்கத்தின் முழு ஆதிக்கத்தில் இருக்கவேண்டும், கல்விச் சபைகள் செய்யும் தீர்மானங்களுக்கு கல்வி மந்திரி தவிர கல்வியிலாகா அதிகாரிகள் தலையிடுவதாகாது சில சமயங்களில் கல்வி யிலாகாவை இக் கல்விச் சபைகள் கண்டிக்கவும் கூடும் சில டிப்டி இன்ஸ்பெக்டர்கள் கல்வி யிலாகாவின் ஆதிக்கத்தில் வைக்கப்படவேண்டும். அவ்விதம் கல்விச் சபைகள் சீர்திருத்தப்பட்டால் தான். ஆசியர்களுக்கு உண்மையில் சுதந்திரம் அளித்ததாகும். ஆரம்ப ஆசிரியர்கள் சுவதந்திரம் அடைந்தாலல்லாது நமது நாடு சுவதந்திரம் சீக்கிரம் அடைய வழி கிடையாது. காங்கிரஸ் மந்திரிகள் கவனிப்பார்களாக.

ஆரம்ப ஆசிரியன்.

# ஆரம்பக் கல்வி

இயற்கை ஒவ்வொரு நாட்டுக்கு ஒவ்வொரு விதமாகத் துணைசெய்து வருகிறது. அத்துணைவழி நடக்க வேண்டுவது அவ்வவ் நாட்டார் கடமை.

வாழ்வுக்கு இன்றியமையாதது கல்வி. அக் கல்வி அவ்வவ் நாட்டு இயற்கை வளத்துக்கு ஏற்றமுறையில் போதிக்கப் பெறல் வேண்டும். அப்பொழுதே மக்கள் நல்வாழ்வு நடாத்தும் வாய்ப்புப் பெறுவார்கள். நாட்டின் இயற்கை வளத்துக்கு மாறுபட்ட முறையில் கல்வி போதிக்கப் பெற்றால் மக்கள் வாழ்வு பல வழியிலும் பாழ்படும்.

நமது நாடு இப்பொழுது எம் முறையில் கல்வி பெற்று வருகிறது? நமது நாட்டு முறையிலா? வேறு நாட்டு முறையிலா? வேறு நாட்டு முறையிலேயே நம் மக்கள் கல்வி பயின்று வருகிறார்கள். அதனுல் வாழ்வில் பலதிற முட்டுப்பாடுகள் நேர்கின்றன. ஆதலால் தற்காலக் கல்விமுறையை மாற்ற அறிஞர் முயற்சிசெய்தல் வேண்டும்.

தற்போதைய ஆட்சியில் காங்கிரஸ் மந்திரிமார் வீற்றிருக்கிறார். இச்சமயத்தில் கல்வி மாற்றப்பெறுவது நலம். முறை மாற்றத்துக்குக் கல்வி இலாகா அதிகாரியின் ஆலோசனையை எதிர்பார்த்தல் கூடாது. அவர் கல்வி யறிவுடையார் என்பதில் ஐயமில்லை. அவர் பெற்ற கல்வி எந் நாட்டினது என்பதே ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

அணித்தே கோயம்புத்தூரில் கூடிய ஒரு கல்வி மகாநாட்டில் நமது மாகாணக் கல்வி இலாகா தலைவர் திரு. ஸ்டேதம் தங்கருத்துக்களை வெளியிட்டார். அவைகள் போற்றவும் படுகின்றன; தூற்றவும் படுகின்றன. போற்றல் தூற்றல் இரண்டும் வேண்டுவதில்லை. மேல் நாட்டுக் கல்வி முறை திரு. ஸ்டேதம் உள்ளத்தில் ஊறி நிற்கிறது. அவ்வழி நின்று அவர் பல கருத்துக்களை வெளியிடுகிறார். அவர்மீது குற்றஞ் சுமத்தலாகாது இனிக் கல்விமுறைமாற்றத்துக்கு அரசாங்கம் பல நாட்டநுபவமுடைய இந்தியர் துணை நாடுமென்று நம்புகிறோம்.

காங்கிரஸ் மந்திரிமாருக்குச் சில ஆலோசனை கூற முன் வந்திருக்கிறார். ஒரு சகோதரர் 'லஞ்சம்' நிறுத்தப்படல் வேண்டுமென்று 'ஹிந்து'வில் எழுதியுள்ளார், 'லஞ்சம் தீயொழுக்கத்தின் பாற்பட்டது. 'லஞ்சம்' எவரால் வாங்கப்படுகிறது? பழைய முறைப்படி திண்ணைப் பள்ளிக் கூடங்களில் படித்தவராலா? தற்கால முறைப்படி அமைந்துள்ள மூலாதாரப் பள்ளிகளில் பயின்று பின்னை பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவராலா? விரிவுரை வேண்டுவதில்லை. தற்கால முறையில் கல்வி வளர வளரப் பக்கத்தில் தீயொழுக்கமும் பெருகுகிறது. காரணமென்னை? கல்வி முறை நாட்டின் இயற்கைக்கு அரண் செய்யாமையேயாகும். அம்முறை வேறு நாட்டின் இயற்கைக்கு அரண் செய்வதா யிருக்கலாம். ஆதலால் ஆரம்பக் கல்விமுறை மாற்றப்பட்டே தீர்தல்வேண்டும்.

மூலாதாரப் பள்ளி ஆசிரியர் மீது பல குற்றங்கள் சாட்டப்படுகின்றன. குற்றஞ் சாட்டுவது எளிது. குற்ற நிகழ்ச்சியின் மூலகாரணங் கண்டு, கழுவாய் தேடுவது அறிவுடைமை. மூலாதாரப் பள்ளி ஆசிரியர் பால் குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணங்கள் பல கூறலாம். நாட்டின் இயற்கைக்கு மாறுபட்ட கல்வி முறை, ஒழுங்கற்ற சட்ட திட்டக் கட்டுப்பாடுகள், ஆசிரியர் விரும்பாத பாடபுத்தக ஏற்பாடு, அவ்வப்போது வருங்கல்வி அதிகாரியின்வழி ஆசிரியன்மார் நின்றொழுகும் கடப்பாடு, அவ்வதிகாரிகளின் உருட்டு மருட்டு, அவைகளால் விளையும் அச்சம், ஸ்தல ஸ்தாபன தலைவர்களின் கோபத்துக்கு ஆளாகாத முறையில் ஆசிரியன்மார் நடத்தல், சம்பளக் குறைவு அதுவுங் காலத்தில் பெறுமை, வயிற்றுக்கு வனவாசம், வசதிகளின்மை, அடிக்கடி மாற்றப் பெறுதல் முதலிய பலவற்றைக் குறிக்கலாம். இவைகள் களையப்பட்டால் ஆசிரியர் குற்றங் குறைகள் பல ஒழியும்.

ஆசிரியன்மாருள்ளத்தில் அச்சம் இருத்தலாகாது; அவர் உரிமையின்பம் நுகர்பவரா

யிருத்தல் வேண்டும். உரிமையில்லா ஆசிரியர் பிள்ளைகளிடத்தில் அன்பாக நடத்தல் இயலாது. ஆசிரியர் உரிமையுடையவராதல் எப்படி? அவரைச் சூழ்ந்துள்ள கட்டுகள் தொலைதல்வேண்டும்.

ஸ்தல ஸ்தாபனம் முதலிய அமைப்புகளின் சார்பில் பள்ளிக்கூடங்கள் இருத்தலாகாது. பயிற்சியில் பண்பட்ட ஆசிரியன்மாரே பொருந்திய இடங்களில் பள்ளிகள் அமைத்துக்கொள்வது நலம். அவ்வவ்விடத்துக் கேற்றபடி அவர் பிள்ளைகட்குப் போதிப்பது சிறப்பு. இடங்களுக்குப் பொருந்தாத பாடபுத்தகங்களை ஆசிரியர் பிள்ளைகட்குப் போதிப்பதால் என்ன பயன் விளையும்? குழந்தைகள் குருட்டுப் பாடஞ் செய்தே அல்லலுறும். முதல்முதல் பிள்ளைகள் தங்களைச் சூழ்ந்துள்ள பொருள்களைப் பற்றி அறிந்து கொள்வது ஒழுங்கு. பின்னை பலவற்றை அவர்கள் படிக்கலாம்; உ[ண]ரலாம். புலியைப் பாராத சிறு குழந்தைகட்குப் புலியைப் பற்றிப் போதிப்பது தகுதியா? ஆகவே குறிப்பிட்ட பாட புத்தகங்களையே போதித்தல் வேண்டும் என்னும் நியதி இருத்தலாகாது. தற்காலப் பாட புத்தகங்கள் பெரிதும் வியாபாரப் போட்டியினின்றுங் கிளம்புவன. அவைகள் ஆசிரியர்களுக்குத் துணைசெய்வன வாகா. இடங்களுக்கேற்ற முறையில் பாட புத்தகங்கள் அநுபவமுள்ள ஆசிரியர்களால் எழுதப் பெறுவது நலம். புத்தகங்களில்லாமலே பல நுட்பங்களைச் சூழ்ந்துள்ள பொருள்களைக் கொண்டு போதிக்கலாம்.

ஆசிரியர்கட்குக் கட்டுப்பாடில்லாவிடின், அவர்கள் எப்படி நன்முறையில் தொண்டு செய்வார்கள் என்று சிலர் கருதலாம். கட்டுப்பாடுகளே ஆசிரியன்மாரின் பொறுப்பைப் பிடுங்கி விடுகின்றன என்பது நமது கருத்து. கட்டுப்பாடு உடைபட்டால் ஆசிரியன்மாருக்குப் பொறுப்பு ஏற்படும்.

கல்வி இலாகா இருக்கலாம். அதில் அநுபவமுடைய பொறுப்பாளரு மிருக்கலாம்; அவர்கள் ஆசிரியரைக் கவனியாது, பிள்ளைகளை மட்டுஞ் சோதனை செய்து, பள்ளிகளின் திறமைக் கேற்றபடி அரசாங்கத்தைத் துணைபுரியச் செய்யலாம். பள்ளியால் நற்பயன் விளைந்தாலன்றோ ஆசிரியர் நிலை கிராமத்தில் உறுதிப்படும்? கிராமத்தார் நல்லாசிரியருள்ள பள்ளியையே நாடுவர். இம்முறையால் பொறுப்புடைய ஆசிரியரே பள்ளிகளை நடாத்தப்புகுவர். ஆசிரிய ரியல்பு வாய்க்கப் பெறாதார் ஆசிரியராக வாழவமாட்டார். நல்லியல்பு வாய்ந்தவரே ஆசிரியராக வருவர்.

இப்பொழுது கிராமத்தார்க்கும் ஆசிரியர்க்கும் எவ்விதத்தொடர்புமில்லை. ஸ்தல ஸ்தாபனத்தலைவர், கல்வி அதிகாரி முதலியோர் தயவுக்கு எளியராவோரே ஆசிரியன்மாராக அமர்கிறார். நல்லியல்பு இல்லாதாரும் காலம் கழிக்க ஆசிரியராகிறார். இவர்கள்பால் குற்றங் குறைகள் நிரம்புதல் இயல்பே. இக்குற்றங் குறைகளை அதிகாரிகள் சமயம் நேரும் போதெல்லாம் எடுத்துக்காட்டுவதால் ஒரு பயனும் விளையாது. நிகழ்ச்சித் தேர் பழையபடியே ஓடிக்கொண்டிருக்கும்.

ஆரம்பக் கல்வி ஒழுக்கத்தின் அடிப்படை. ஒழுக்கத்தின் அடிகோலும் பொறுப்புடைய ஆசிரியன்மாரைச் சூழ்ந்துள்ள அடவிகளை அழித்தல்வேண்டும். அடவிகள் அழிந்தால் தீய விலங்குகள் தாங்களே ஓடிப்போகும். ஆசிரியன்மார் உரிமையுடையவராகிப் பிள்ளைகளை நாட்டு முறையில் கல்வி பயிலச் செய்வர். ஆரம்பக் கல்வி ஆசிரியன் மாரிடத்தில் வருங்கால உலகம் ஒப்புவிக்கப்படுகிறது. ஆசிரியன்மார் உரிமை யுணர்வும் பொறுப்பும் உடையவரா யிருந்தாலன்றி வருங்கால உலகம் நலமுறாது. ஆகவே ஆசிரியன்மார் உரிமை இன்பந் துய்ப்பவராயிருத்தல் வேண்டும்.

நாட்டுமுறையில் தற்போதைய மந்திரி சபை ஆரம்பக் கல்வி திட்டங் கோலுமென்று எதிர்பார்க்கிறோம்.

'நவசக்தி'

---

# Press Communique.

No. 277 (26-6-37)

## MASS EDUCATION

MASS EDUCATION:—The primary object of the State in providing a system of Elementary education is to ensure that the masses of the country are gradually made permanently literate. A limited number of children are made permanently literate in secondary schools, Special schools at home or by institutions not recognized by or provided by the State; but the elementary school system, approved and controlled by the State, is the main channel through which it can be expected that in course of time the whole population will be made literate. Looking back over a period of thirty years in this province it will be seen that there have been very considerable developments in the field of elementary education, There has been a large increase in total expenditure, a large increase in the total number of students enrolled and a large increase in the number of school provided. In 1905-06 the total enrolment in the first five standards of elementary schools for both boys and girls was 711,674, in 1934-35 the total enrolment was 2,715,005, in 1905-06 the total expenditure from all sources on elementary schools was Rs. 28.50 lakhs; the corresponding figure for 1934—35 was Rs. 235,41 lakhs. In 1905-06 the total number of elementary schools for boys and girls was 21,399; in 1934-35 the figure was 49,123. In addition to these large statistical increases Government have passed legislation for the introduction of compulsion and have introduced compulsion in a number of areas, particularly municipal areas. Government have also by legislation insisted on the raising of an educational cess to be used, with its equivalent Government contribution, by local boards, for the furtherance of elementary education. Government have in addition considerably increased the provision for the training of teachers and the percentage of untrained teachers working in elementary schools has fallen from 73.91 in 1905-06 to 30-33 in 1934-35. Viewed from these aspects it would appear as if progress had been satisfactory. A careful analysis of the existing position, particularly of the relationship between the strength of elementary school standards and the increase in literacy of the population, reveals however the fact that, while it is satisfactory that there has been a very large increase in the enrolment of elementary schools, the large increases have not resulted in anything like a proportionate increase in the duration of school life and consequently in the production of permanent literates. The figures for literacy for the last three censuses show that the rate of increase in the percentage of the literates of the population is moving extremely slowly. The increase in the percentage of male literates only increased by 1·4 percent in the decade 1911-21 and only increased by 0.9 per cent in the decade 1921-31. Theincreases in the percentages of female literates were only 0·8 for the decade 1911-21 and only 0.5 for the decade 1921-31. It will be seen that actually the rate of idcrease has fallen between 1921 and 1931. It seems obvious that in spite of all that has been accomplished in the field of mass education there is little relationship between increased total enrolment and the production of literates from the elementary school system. While there has been an increase of over two million pupils in total enrolment in the first five standards during the last thirty years, the increases in the percentage of literates to the total population have only been fractional. Since the 1911 census the increase in the total number of male literates has only been 900,000 and the increase in the female literates only 329,000. It is not difficult to explain the causes for these facts. The main difficulty

which has always faced the Education department is the difficulty of retaining children in school long enough to make them permanently literate and large increases in expenditure, total number of pupils and total number of schools have not succeeded in increasing the duration of school life. In fact, viewed in terms of percentages, the huge increase in enrolment, particularly in the I standard, has resulted in a decrease in the percentage of the number of pupils in the V standard to the number in the I standard. While it is satisfactory that the total number of pupils reading in the V standard, for example, has risen from 45,522 to 118,477, it is equally disquieting that these figures should form a smaller percentage of the total enrolment in the I standard than was the case thirty years ago. Similarly, the percentage of pupils admitted into the I standard in 1905-06 who reappeered in the V standard in 1909-10 is considerably higher than the percentage of pupils admitted into the I standard in 1930-31 who reoppeared five years later in standard V. In technical language "wastage" and "stagnation" have not only continued but increased and Government have seriously to consider what steps should now be taken to prevent what, from a financial point of view, is in reality an ineffective expenditure of very large sums of public money. It may be safely stated, as was indicated in the Report of the Auxiliary Committee of the Indian Statutory Commission, that with rare exceptions money spent on the education of children who do not proceed beyond the III standard is almost totally wasted and from the figures given it is not difficult to calculate what large sums of money have been spent almost without any return to the State. Actual figures for the five years 1930-31 to 1934-35 show that out of 1,369,833 pupils enrolled in the I standard in 1930-31 only 303,931 survived to the IV standard in 1933-34 and only 118,477 survived to the V standard in 1934-35. The wastage between standards I and II still remains enormous. Out of 1,369,833 pupils enrolled in the I standard in 1930-31 only 527,414 were found in standard II in the following year, there being a drop of 850,000 pupils between I and II standards in one year.

Apart from the reluctance of certain classes of parents to keep their children in school and the economic necessity for many children, particularly of the poorer classes, to be occupied in domestic, agricultural and industrial work, the Government believe that the main reason for the abnormal wastage in elementary schools lies in the schools themselves. Large numbers of schools do not by their structure provide for a complete primary course and many such schools have remained incomplete and ineffective for a long period of time. In addition, there are many schools whieh, by reason of their uneconomic strength, their incompleteness and the adequacy of the other school provision in the local area, do not deserve to continue in existence. Further, a very large proportion of the total number of schools are single-teacher schools in which obviously one teacher engaging several standards and sections of standards cannot, unassisted and inadequately supervised, be expected to give proper education and adequate instruction to the pupils in his charge. This applies particularly in the case of the large number of very young children in the lowest standards amongst whom there is the greatest tendency to wastage and stagnation and for whom a whole-time well-equipped teacher, preferably a well-trained woman teacher, is an absolute necessity. Large numbers of under-aged pupils attend the I standard occupying much needed school places and using the school practically as a creche. This greatly handicaps the work of the I standard and Government have decided to exalude all boys of under 5½ and all girls of under 5 from school, except in the case of kindergarten, nursery or model schools. Although in recent years Government have made serious endeavours to procure more trained and more highly qualified teachers,



many schools, particularly aided schoels, still employ unqualified and untrained teachers. The limited capacity of these teachers makes it impossible for them to ensure that the pupils in their charge move rapidly up the elementary schoel course and emerge as permanent literates. The existence of so many incomplete, under-staffed and improperly equipped schools has resulted not only in high wastage but in stagnation as the result of which pupils even when they are sucessfully retrained in school remain in the lowest standards for a number of years and never secure any education of real value. The incomplete structure of lower elementary schools is revealed in the following figures. Out of a total of 42,574 lower elementary schools, only 7,159 are complete schools with 5 standards, 27,142 have only 4 standards, 6,147 have only 3 standards, 1,757 have only 2 standards, and 369 have only 1 standard. Had these schools adequate staffs, even though they were incomplete in structure, better education and less wastage might have been obtained, but out of the total number of lower elementary schools as many as 18,639 schools have only one teacher. Of this total 284 are 5 standard schools, 12,714 are 4 standard schools, 4,046 are 3 standard schools, and 1,295 are 2 standard schools. The inability of a single teacher to handle these schools, satisfactorily is further emphasised when it is remembered that many of the standards in those schools are divided into more than one section. In addition to the impossibility of a single teacher satisfactorily handling a number of classes in complete and incomplete schools, the staff of the remaining schools is in many cases insufficient, as many as 1,891 schools with 5 standards having only two teachers and as many as 9,537 schools, with 4 standards having only two teachers. The inefficiency of many uneconomic schools is illustrated by the fact that of the total number of lower elementary schools as many as 11,819 are working with less than thirty pupils on the rolls and a much smaller number than that in actual attendance. The following figures reveal the extent to which there is still need for improving the quality of the staff in elementary schools. There are in boys' and girls' elementary schools at present as many as 33,630 untrained teachers of which as many as 13,822 are untrained teachers of the lower elementary grade. Although Government have initiated the policy of eliminating the lower elementary teacher altogether, there are still, in boys' and girls' elementary schools, as many as 32,095 trained teachers of the lower elementary grade.

Taking all things into consideration, Government feel strongly that the most urgent need in mass education at the moment is to eliminate ineffective and inefficient schools and to build up in their places a system of complete, economically well-filled, well-staffed, five standard primary schools; schools which in effect by their structure and equipment, should give manifest assurences of adding to the literecy recently taken steps to see that in future and after a due warning grant-in-aid and subsidies are given only for the maintenance of (1) complete and properly staffed schools, 2 feeder schools capable of proving that they are regularly passing on their pupils to the higher standards of complete schools, and (3) single-teacher or two-teacher schools, isolated areas where the children of school-age are few in number and where plural class teaching must necessarily be adopted. Government have also taken steps to prohibit as early as possible the employment of inadequately qualified and untrained teachers. Government, however recognize that even a qualified and trained teacher cannot obtain the best results if his conditions of service are unsatisfactory, his pay inadequate and irregular and his status insufficiently recognized. They have, therefore, undertaken an enquiry in to the conditions of service of teachers in elementary schools, and have recently devised means for gradually

securing suitable improvements in the conditions of service of the elementary school teacher.

Government further consider that one of the causes of unsatisfactory progress is the unsuitability of the curriculum in elementary schools and the absence in many cases of proper methods of teaching. The scheme of studies for elementary schools is not sufficiently related to the life and surroundings of both parents and pupils. This is particularly so in the case of rural elementary schools. If the village school is to be of real value to the village children and to the surrounding rural life generally the teaching imparted in the school must be directly related to the realities of life in its environment. The stereotyped methods now generally employed by schoolmasters, many of whom do not belong to rural areas, tend to make study in the school something foreign and extraneous and therefore something difficult and uninteresting to the majority of the pupils. The teaching of nature study, for example, from a text-book without its being in any way related to the actual life in and around the school is of no practical value. There is little or no training in the powers of observotion, hardly any practical work, and no interest is taken in gardening. The teacher usually tends to divorce the pupil from village life and hereditary occupations rather than help to train up better villagers. The unsuitability of the present curriculum is also evinced by the fact that the most important subjects such as hygiene, civics and practical instruction are now only optional subjects. The reorganization of the courses of study in elementary schools naturally necessitates a reorganization of the work done in the training schools. What is especially required is that educated villagers should be trained in rural bias so as to make the imparting of knowledge a living thing in relation to every day happenings in village life. In this connexion Gevernment believe that it is probable that the project method of teaching in elementary schools is the best suited, particularly for rural schools. In order to frame a curriculum more suitable for elementary schools, Government have recently set up a special committee competent to draft detailed syllabuses for each standard of elementary schools. Formal and uninspiring teaching from text-books has been partly caused by the use of an excessive number of text-books and Government have recently passed orders largely reducing the number of text-books permitted to be used in elementary schools. In order to ensure a greater correlation between the training course in training schools and the work, particularly of the village teacher; Government have also ordered that the courses in training schools should be fundamentally revised.

Government further consider that one of the seasons why the village teacher is unable to make the village schools function as the centre point of rural reconstruction work, is that the teacher, trained long ago probably in antiquated methods, does not receive any further instruction in up-to-date methods throughout his service. They therefore propose at an early date to institute a widespread system of refresher courses in training for elementary school teachers.

As already indicated, there are large numbers of elementary schools whose working is unsatisfactory and in consequence of which much of the money spent upon them can only be regarded as waste. There is a wide difference between the reported number on the rolls of many schools and the reported number in daily attendance. If this is so as shown in the actual reports from the schools themselves, there is unfortunately every reason to believe that the actual difference in daily practice is much larger than what is reported. There is also every reason to believe that many of the schools work very irregularly. Owing to inadequate supervision, schools, particularly those in rural areas, have little fear of a surprise visit or other visits on more than one or two days in the year. This must necessarily result in the schools, if they are not under well-organized managements, being irregular in their working and in some cases actually bogus in their existence. Government have recognized the need, therefore, for a strong inspectorate. In order to strengthen the inspectorate during times of rapid development, Government adopted the policy of having a District Educational Officer for every district of the Presidency. Government also appointed a number of Junior Deputy Inspectors and recently agreed to the appointment of a Special Deputy Director for Elementary Education. Government have, however, found in practice that even the adoption of these measures has not been sufficient to ensure adequate supervision, frequent, visits



to schools and the prevention of waste of public funds. District Educational Officers, Deputy Inspectors of Schools and Junior Deputy Inspectors, Inspectresses of Girls' Schools and Sub-Assistant Inspectresses are concenrned with the routine work of and the inspection of over 50,000 institutions in this Presidency and the Special Deputy Director for elementary Education is concenrned with the administration and control of the whole of mass education in all its aspects thsoughout the Presidency. It is not, therefore, surprising that there is still need for more adequate supervision and control. The total expenditure on primary education in this province amounts to Rs. 2·35 crores, of which Rs. 1·37 crores are met from Government funds and Rs. 53·47 lakhs are met from local body funds. The total amount spent by Government on the inspecting agency for all Indian schools is approximately Rs. 16.7 lakhs or only 7·1 per cent of the total expenditure on elementary education and the total amount spent by Government on the inspection and administration of all classes of educational institutions in the province amounts to only Rs. 18·92 lakhs or 7·5 per cent of the total Government expenditure on education. In consideration of the fact that such very large sums of money are being spent on elementary schools and that such a large percentage, over 50 per cent of total Government expenditure on education, is spent on elementary schools and in view also of the fact that the figures given in this resolution indicate large waste of public funds owing to the ineffectiveness of much of the education imparted, Goverament have decided that sound policy dictates that a further strengthening of the inspectorate should be undertaken without delay.

(Continued)

# Monthly Return Appendix 33.

புதிய ஆரம்பக் கல்விச் சட்டத்திருத்தத்தின் 5-வது பிரிவின்படி பிரதி மாதமும் ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்திர ரிபோர்ட்டு 15-ந் தேதிக்குள் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்ப வேண்டும். பிரதி மாதமும் எழுதியனுப்ப சிரமம் இல்லாமல், ஆங்கிலத்திலும், தமிழிலும் கலந்து பாரங்கள் (Monthly return Forms) அச்சிடப்பட்டிருக்கின்றன. 4 அணு தபால் பில்லைகளை (Postal Stams) காலணு பில்லைகளாக அனுப்பினால் 24 பாரங்களும் உடனே தபாலில் அனுப்பிக்கப்படும்.

மானேஜர்
"ஆரம்பக் கல்வி ஆபீஸ்"
94-95, புதுத்தெரு மண்ணடி, மதராஸ்.


## ஆப்த நண்பன்

நீங்கள் அறியாமையினால் தேக சுகத்தைக் கெடுத்துக் கொண்டு அல்லல்படும் சமயத்தில் உங்களுக்கு ஆப்த நண்பனாக உதவும் எங்களுடைய உலகப் பிரசித்தி பெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களை உபயோகித்தீர்களா? இல்லையேல் உபயோகித்து உடனே தேக அசதி, மலச்சிக்கல் நரம்புகளின் தளர்ச்சி, பசியின்மை, ஞாபக குறைவு, தாது புஷ்டியின்மைமுதலிய வியாதிகளை நிவர்த்தி செய்துக் கொள்ளுங்கள். 32 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0

இனாம்! காம சாஸ்திரம் இனாம்!!

விலாசத்தை தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26. பிராட்வே. : : : : மதராஸ்

40 மாத்திரைகள் அடங்கிய



## நவ யௌவனம் வேண்டின்.

உலகப்பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும்
தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

# மதனமஞ்சரியை

## உபயோகியுங்கள்.

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல் ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இனம் கேட்லாக். இனம்!

ஒருமணி நேரத்தில் வாலிபம்

## ரமணா விலாசினி



இரவில் ஒரு மாத்திரை படுக்கைக்குச் செல்லும் ஒருமணி நேரத்துக்குமுன் சாப்பிடுவதால் இஷ்டப்படி வீரிய ஸ்தம்பனம் உண்டாகின்றது.

ஒரு டப்பி விலை ரூ. 1—0—0

மதன மஞ்சரி பார்மஸி.
22, சைனபஜார் ரோட்,
மதராஸ்.

---

ஒன்று முதல் 5-வது வகுப்புக்களுக்குப்
பாடபுத்தகங்களாக வைக்கத் தகுந்தவை

# மணி வாசகம்

நூதன முறையில் ஆரம்ப பாடசாலைகளைப் பார்வையிடும் அனுபவ மிகுந்த ஆசிரியர்களால் தயாரிக்கப் பெற்றவை. பல சித்திரப் படங்கள் கொண்டவை படங்களின் அளவும் தன்மையும் நடையின் நேர்மையும் தெளிவும் இவ்வாசக வரிசையின் பெயருக்கு ஏற்றவாறே அமைந்துள்ளன.

| | அ. | பை. |
|---|---|---|
| முதல் புத்தகம் | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| மூன்றும் ,, | 4 | 0. |
| நான்காம் ,, | 5 | 0 |
| ஐந்தாம் ,, | 6 | 0 |

## பாலர் கணிதம்

முத்தியாலுபேட்டை
உயர்தர கலாசாலை பிரதம ஆசிரியர்
கே. எஸ். ஸ்ரீனிவாசாச்சாரியார்
B. A., L. T.
இயற்றியது.

முதல் புத்தகம் 3-வது வகுப்புக் குரியது. 6 அணா
இரண்டாம் புத்தகம் 5-வது வகுப்புக் குரியது. 7 அணா
மூன்றும் புத்தகம் 4-வது வகுப்புக் குரியது. 8 அணா

(இப்புத்தகங்களுக்குத் தெலுங்கு பிரதிகளுண்டு.)

இவை அரசாங்க அங்கீகாரம் பெற்றவை.

## ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,

53-56, பவழக்காரத் தெரு, சென்னை.

Printed in the Association Press, & Published by P. Veeraraghavan,
94/95, New Street, G. T. Madras.

# Venkatrama & Co.

Printers, Publishers, Book-sellers, Etc.

## வெங்கடராம நீதிகதா வாசகம்

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் பாகம் | ...0—1—6 | நான்காம் பாகம் | ...0—1—6 |
| மூன்றும் பாகம் | ...0—1—6 | சித்ரபால சிக்ஷை | ...0—3—0 |

## வெங்கடராம தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் வகுப்பு | ...0 2 0 | நான்காம் வகுப்பு | ...0 4 0 |
| இரண்டாம் ,, | ...0 3 0 | ஐந்தாம் ,, | ...0 4 6 |
| மூன்றும் ,, | ...0 3 0 | | |

## POETICAL SELECTIONS

(Approved by the ext Book Committee).

| | | | |
|---|---|---|---|
| FIRST BOOK For I Form | 0—3—0 | THIRD BOOK III Form | 0—4—0 |
| SECOND ,, II ,, | 0—3—0 | VENKATARAM'S 1st Primer | 0—2—0 |

நெ. 4. கார்பொரேஷன், பழக்கடை, சைனபஜார், மதருஸ்.

---

# அகில இந்தியா

## ஆசிரியர்கள் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி, லிமிடெட்

### சென்னை.

ஆசிரியர்களால், ஆசிரியர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டது.

உங்கள் வயோதிகத்தில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் நீங்கள் என்ன சேமித்து வைத்திருக்கிறீர்கள்?

உடனே எஜன்ஸி நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் எழுதவும்.

தலைமை ஆபீஸ்:—

94/95, புதுத்தெரு, மண்ணடி, ஜி. டி. மதருஸ்.

Registered No. M 3671.

# "ARAMBA BOTHINI"

## A High Class Tamil Monthly

## Good and Healthy Reading

FOR SCHOOL CHILDREN AND **RURAL** READERS

EDUCATIONAL, INSTRUCTIVE, ENTERTAINING, CHARACTER BUILDING

## TEACHERS & PARENTS

SHOULD ENCOURAGE READING THIS VERY USEFUL AND HEALTHY MONTHLY.

FREE FROM IMMORAL STORIES & ADVERTISEMENTS AND CINEMA PICTURES

**ANNUAL SUBSCRIPTION 9 As. 2 COPIES Re. 1.**

***ARAMBA BOTHINI OFFICE,*** *DASARPURAM, TINNANUR R.S.*

---

# ஹரிதாசர் கைகண்ட அவிழ்தங்கள்.

**1. 'கக்வா'** கக்குவானுக்கு மிகவும் கைகண்டது; ரிஜிஸ்டர்செய்யப்பட்டது. இந்த வியாதிக்கு உலகத்தில் சகல மருந்துகளிலும் இதுவே மிகவும் மேலானது; உபயோகித்துப் பார்த்தவர்கள் விளம்பரம் செய்கிறார்கள், ... புட்டி ரூ 1.
3 புட்டி வாங்கினால் தபால் சார்ஜ் இனாம்.

**2. க்லோரோ சாலினால்** இதுவே ஹரிதாசர் காலரா துளி மருந்து; தவறினதே கிடையாது, அபூர்வமானது; மருந்து 30—35 வருஷ அநுபவம். வாந்தி, காலரா, பேதி, வயிற்றுநோய் இவைகள் விரைவில் நீங்கும். புட்டி ரூபா 1 2 0

**3. என்னாத் தைலம்.** ஸ்நானத்திற்கு உபயோகித்தால் சகலவித கண் நோய்களும் நீங்கி சிரசு குளிர்ச்சியாய் கண்களிற்கு ஒளி உண்டாகும். ராஜ உருப்புகளிலுள்ள வேகச்சூடு நீங்கும். புட்டி விலை ரூபா 1 4 0



மருந்து காட்லாக் இனாம்.

வாத்திமார்களுக்கும் வைத்தியர்களுக்கு மாத்திரம் ரூ 5 மருந்திற்கு குறையாமல் ஆர்டர் அனுப்பினால் ரூ 1 தள்ளி கொடுக்கப்படும்.

ஆஸ்துமா நீரிழிவு முதலிய வியாதிகளுக்கு

கை கண்ட மருந்துகள், விபரம் காட்லாக் இவைகளுக்கு விலாசம்

**Dr. H.** தேவதாசர் B.A., L.T., M.T.Sc.,

தாசர் சித்த வைத்தியசாலை,

தின்னனூர், R.S.